# இந்தியப்  பண்பாட்டு அமைப்பு

**(www.indian-culture.org)**

**“குடந்தைப் பகுதிச் சான்றோர்கள்”**

**கருத்தரங்கம்**

## “பாஸ்கரராயர்”

பேராசிரியை**. பால.சந்திரமதி,**

> **“ இன்பம் விழையான் வினைவிழைவான் தன் கேளிர்**
> **துன்பம் துடைத் தூன்றும் தூண் “**

என்ற வள்ளுவ வாய்மொழிக்கேற்ப, இந்த உலக உயிர்கள் அனைத்தும் மெய்யின்பம் காண வேண்டும்; யான் பெற்ற இன்பம், இவ்வையகத்து உயிர்கள் அனைத்தும் பெற வேண்டும் என்ற தன்னலமற்ற உணர்வுடன், நம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துத் தாங்கிய தூண்கள், சிலரே! எவர் அந்த சிலர்? அவர்களின் சாகித்யம் என்ன?

## எது எதுவாய்? எவை? எவையாய்?

சாதாரண **தண்ணீர் -** இறையுறை கோயினுட்புகுந்து வெளிவந்ததும் **தீர்த்தமாகின்றது; சாம்பல் - திருநீறாகின்றது; சாதம் - பிரசாதமாகின்றது; தீ - தீபமாகின்றது; காம்பு - காப்பாகின்றது.**

ஆனால் - அதே இறையுறை கோயிலுட்சென்று, **வெளிவரும் மனிதர் எவரும்**, “**நான் மஹான் ஆகிவிட்டேன்’. எனக் கூறியதுண்டா**? சற்றே சிந்தியுங்கள்! அப்படி ஓர் மனிதன் கூறு வானாகின், அவன் மூன்று நோய்களை நீக்கி, **“இறை”** எனும் ஒரு நாமத்தை மட்டுமே உச்சரிக்கும் சௌபாக்யனனா கத்தான் இருக்க வேண்டும் என்பதே நிதர்சனம் - ஆம்! காமம் வெகுளி, மயக்கம் என்ற மூன்று நோய்களையும், தன்னைத்தீண்டவிடாமல், புறத்தேத் தள்ளித் தன் நாமமும் கெடாமல், இறை நாமத்தை மட்டுமே நினைந்துருகும் மெய்யான உத்தமனே மஹான் ஆகின்றான்.

இவைகளுக்குச் சில சான்றுகளாக …

காமம் துறந்து, இளமையைவென்ற திருநீலகண்டக் குயவனாரே, அறுபத்துமூன்று நாயன்மார்களுள் முதல்வராய், சுந்தரர் பெருமானால் உயர்த்தப் பெற்றார்!

தனிமையை உணர்ந்து, தன் நிலைமறந்து, ஊனுக்கு ஊன் என்ற உறுதியுடன் அன்பாற்றலால், **தன் கண்ணைக் குடுமித்தேவருக்கு எடுத்துஅப்பிய திண்ணனே - கண்ணப்பன்** ' எனக் கயிலைமலையானால் தீண்டப் பெற்றும், **"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பில்லை'** - என **மணிவாசகப்பெருமானாராநாளும்** சிறப்பு பெற்றார்; இம்மையும் இளமையும் வேண்டாம் எனத் துறந்த புனிதவாதியாரே, "தம்மைப் பேணுகின்ற காரைக்காலம்மையார்" என ஈசனால் விளிக்கப் பெற்று அருளப் பெற்றார்.

இப்படி அன்பும், அருளும் இரண்டறக்கலக்கும் பண்பினால் மனிதனை மஹானாக்கமுடியும்; சைவசித்தாந்தம் கூறிடும் மும் மலங்களும் அதனை வள்ளுவம் சிந்தித்த முந்நோய்களாய், நம்மைத் தீண்டாமல் அவைகளை முழுமையாய் அழிக்கவல்ல, வாள்வரிக் கேடயங்களாய், நமக்குக் கிடைத்தக் கவசக் காப்புகள்தாம், **ஆன்மிகம் எனும் அருமருந்துக் கவசம்**. அந்த அருமருந்துகள் எல்லாம், இதிகாசங்களாய், புராணங்களாய், திருமுறைகளாய், மகாத்மியாங்களாய், சகஸ்ரநாமங்களாய், நம்மிடையே உலாவுகின்றன. இவற்றை
திருவுலாவிட்டவர்களே மஹான்கள்!

## <u>அரும்பும் அருளும்</u>:

உடல், உள்ளம், ஆன்மா மூன்றும் சீரான முறையில், வளர்க்கும் மனிதன் முழுமையான வளர்ச்சியைப் பெற வேண்டும் எனில், நமது **தொல்காப்பியர்** பெருமான் குறிப்பிட்ட,

> "**புதுமை, பெருமை சிறுமை ஆக்கயொடு**
> **மதிமை சாலா மருட்கை நான்கே "**

என்ற புதுமை, பெருமை, மதிமை, ஆக்கம் என்ற நூல் வகைப் ஆழ்ந்து, ஆய்ந்து அறிந்தவனாக இருக்க வேண்டும்; இதனை உணர்த்திடத் தோன்றிய மகான்களுள் தலையாய, அத்வைத **ஆதிசங்கரரின்** ஞானவாழ்வில் நிகழ்ந்த நிகழ்வு ஒன்றை நாம் நினைவு கூறல் வேண்டும். **ஆனந்ததலஹரி, சௌந்தர்யலஹரி, தேவிகட்கமா, பவானிதோத்ரம்** போன்ற ஸ்லோகங்களை அருளிய ஆதிசங்கரர், ஒருமுறை, **லலிதா சஹஸ்ரநாமத்திற்குப் பாஷ்யம்** பண்ணநினைத்துத்தமது சீடரிடம் சகஸ்ரநாமச் சுவடிகளை எடுத்துவரப்பணித்தார், ஆயினும்சீடர், விஷ்ணு சகாஸ்ரநாமச் சுவடிகளையே எடுத்துத் தந்தாராம்: இரண்டு, மூன்று முறை இவ்வாறே நடந்ததும், சீடரிடம் ஏன்? இப்படி ? என சங்கரர் வினவ, அதற்குச்சீடரோ,
"தாம் சுவடிகளை எடுக்கையில், ஓர்சிறு பெண்வந்து, சுவடிகளை எடுத்துத்தந்ததாகவும், தானும் அதனை சரிபார்க்காது எடுத்துக் கொண்டு தந்ததாகவும் கூறினார். இத்தகு, வியத்தகு அற்புதத்தினைத் தனது' ஞானசிருஷ்டியால் அறிந்து கொண்ட ஆதி சங்கரர், அன்னை பராசக்தியின் ஆனண இதுவே என ஏற்று **விஷ்ணு சகஸ்ரநாமத்திற்குப் பாஷ்யம்**

எழுதினார். ஆயினும், அதே லலிதா சஹஸ்நாமத்திற்குப் பின்னால் வந்த மஹான் ஒருவர் மூலம் பாஷ்யம் செய்விக்க வைத்தாள் அன்னைபராசக்தி அப்படிப்பின்னாளில் வந்தவரது **பக்தியையும், அனுஷ்டான சாதகத்தையும்,** பாண்டித்யத்தை அரும்புச் சிறுமியால் அன்றே அருளிச் செய்வித்த அன்னை பராசக்தியின் அருள் உபாசகர்தாம் நமது
“பாஸ்கரராயர்”.

## <u>மண்வாசமும், மனஉபாசமும்:</u>

“சிங்க மராட்டியர்தம் கவிதைக்குத் சேரத்துத் தந்தங்களைப் பரிசாய்த்தந்து “பாட்டாலே பாராட்டிய மகாகவியின் மகாத்மிய வரிகள், அந்த மராட்டிய மண்ணின் வீரவிவேகத்தையும், மொழியின் வாசனையையும் நமக்கு எப்போதும் நினைவூட்டிக்கொண்டே இருக்க வேண்டும் அன்றோ! அந்த **மராட்டிய மண்ணில், கம்பீரராயர், கோணாம்பிகா** தம்பதியர்க்கு மகனாகத் **திருஅவதாரம்** செய்தவரே **பாஸ்கரராயர்**.

கம்பீரராயர் விஜய நகர அரசவையில், அமைச்சர் பணியில்
இருந்ததோடு, மகாபாரத உபன்யாசம் செய்து, அதனைப் **‘பாசி’** மொழியில் மொழி பெயர்ப்பு செய்தார்; அதன் மூலம் **“பாகீரதி”** என்ற பரம்பரைப் பட்டத்தையும் பெற்றவர்.

**கம்பீரராயார், பாகவதப் பரம்பரையையும் , கோனாம்பிகா ஆகமசாஸ்திர பரம்பரையையும்,** சேர்ந்தவர்கள் ஆயினும், அவர்களது பண்பும், உயர் நோக்கங்களும் ஒரு சிறந்த தம்பதியராகவே காட்டியது. **கோணம்பிகாள், சூரியனைப் பிரார்த்தித்துத்** தன் கணவரைப் போன்ற உயர் **அறிவுசுடராய்த்** தனக்கு மகன் வேண்டும் எனப் பிரார்த்தனை செய்து கொண்டு ஈன்ற மகனுக்கு “**பாஸ்கரர்**” (**சூரியன்**) என்றே நாமகரணம் இட்டனர்.

பாஸ்கரராயரின் பிறப்பு 26.04.1683 - கிருத்திகை நஷத்திரம், சுக்லபட்சம் என அவர்களது சிஷ்யர்களாலும், வம்சாவளியினராலும் குறிக்கப்படுகின்றது.

## <u>விளையும் பயிர்:</u>

பாஸ்கரரயாரின் **ஐந்தாவது** வயதில், அவரது தந்தையரர் அவரை, சரஸ்வதி வழிபாட்டில் ஈடுபடச் செய்ய, பாஸ்கரரோ, **சரபேஸ்வரஸ்தோத்திரத்தைத்** தானே பாடலானார்;

அதனைக் கண்ணுற்றக் காசிப் பண்டிதர்கள், ராயருக்கு உபநயனம் செய்து வைக்கும்படி கம்பராயரிடம் கோரினர்.

அதன்படி உபநயனம் பெற்றார் பாஸ்கரர் அப்போது, **ஸ்ரீருங்கேரிபீடத்திற்குச்** செல்ல வந்த **மஹாபண்டிதர்**, **ஸ்ரீ நரசிம்ஹானந்தர்** கம்பீராயாரின் இல்லத்திற்குச் செல்ல நேர்ந்த போது, பாஸ்கரராயாரின் மேதாவிலாசத்தைக் கண்டு, அவரைத் தனது குருகுலம் அமைந்துள்ள லோகபள்ளிக்கு, அத்யாயனம், செய்ய அனுப்பி வைக்கக் கூறினார். அங்கு ராயர், **18 வித்தைகளையும்** பயின்றார். அக்காலத்தில் **மந்திரதிறத்தையும்**, **வக்தேவி மந்திரதீக்ஷயும்** கற்று பாஸ்கரராயர், உயர்வடைந்தார். தனது பதினெட்டாவது வயதில் ஆனந்தி என்ற பெண்ணை மணந்து, அவருக்கும், **அதர்வண மந்திரம்** - உபதேசம் செய்துவைத்தார். மேலும் அந்த அதர்வண வேதத்தில் தான் “ **நிபுணன்** “ என்று சொல்வதைவிட , அதனை விளக்கிச் சொல்லும் கர்த்தா என்றே தம்மைக் கூறிக் கொண்டார்.

## பணிந்த பெருமையும், வியந்த சிறுமையும்:

பாஸ்கரராயர் தனது வித்யா பூரண யாத்திரையினை மேற்கொண்டு, குஜராத்தில் **பைத்தான்** நகரத்தில், **ஸ்ரீபர்காசநந்தநாதர்** என்ற **ஸ்ரீவித்யா உபவாசகரிடம்**, தான் யார் எனக் கூறிக் கொள்ளாமல், சாதாரண பணியாளராக அவருக்குப் பணி செய்து ஸ்ரீவித்ய உபாசனையைத் தெளிந்து கற்றார்; அந்நாளில் - வல்லப சம்பிரதாயத்தைத் சார்ந்த சில பண்டிதர்கள் பரகாசநந்த நாதரிடம், சிறுமதியுடன் வாதம் செய்ய அழைத்தனர். பரகாசநந்தநாதரின், முதிர்நிலையை அறிந்த பாஸ்கரர், அந்த சிறுமதியாளர்களிடம், தர்க்கவாதம் புரிந்து வெற்றிகண்டார். அதனைக் கண்ட **பரகாசநந்தர்**, பாஸ்கரருக்குப் **பூர்ணாபிஷேகம்** செய்ததோடு, ராயரை, “**பாஸ்ரானானந்தா**’’ என்ற **நாமதீக்ஷயையும்** தந்து அவரது, மனைவி, ஆனந்திக்கும், பூர்ணாபிஷேகம் செய்து வைத்து, “**பத்மாவதியம்மா**” என்ற **நாமதீக்ஷயையும்** அளித்தனர். வல்லப சம்பிரதாயத்தைவாதில் வென்ற பாஸ்கரர். அந்த சம்பிராதாயத்தைச் சார்ந்த “ **பார்வதி** “ என்ற பெண்ணையும் மணந்தார்.

## சக்தி உபாசகரின் சாகித்யம் எதுவோ?

பாஸ்கரராயர், தனது இருமனைவியாருடனும் சேத்திரம் செல்லும் வழிகளில், பலவிதமான அதர்வன அற்புதங்களைச் செய்து. அந்த வேதம் நல்வழிக்குப் பயன்பட உபதேசம் செய்தார். காசியாத்திரை செல்கையில், ஒரு **மாத்வமஹானையும்வாதில்** வெல்கிறார். **ஸ்ரீலலிதாம்பாளின்** பரிபூரண அருள் பெற்று, **பாஷ்யம்** கண்ட அவரின் தோளில், தேவியவள் கிளியாகவே அமர்ந்து, அவரை மகிழ்வித்தாள். காசியில் **சோம யாகம்** செய்த பாஸ்கரராயரை, காசி வைதீகர்கள், உபாசனா மார்க்கத்தை ஏளனம் செய்து, குறைகூறி, பாஸ்கரரை “வாமா சாரத்தைச் சார்ந்தவர்” - என ஏளனம் செய்திருந்தனர்.

ஸ்ரீ **கங்காதரவாஜ்பேயிடம்** தர்க்க சாஸ்திரத்தை நன்கு கற்ற பாஸ்கரர், அந்தக்காசி வைதீகர்களிடம் தாம் " தர்க்கம் செய்யத்தயார்" - எனக்கூற, அவரை வாதத்தில் வென்றிட, **" குங்குமா நந்தநாதர்** " எனும் யோகியைத்தயார் செய்து வைதிகர்கள் அவரை முதன்மையாகக் கொண்டு வாதம் செய்தனர்.

வாதத்தில் பல கேள்விகளுக்கும், சுலபமாக, சிறப்பாக பாஸ்கரர் பதில் சொல்கின்றார். அப்போது ஸ்ரீ லலிதா **சாரஸ்ரநாமத்தில்** வருகின்ற **" சதுஷ்ஷஷ்டி கோடி யோகினீ பரிசேவிதா " (237ம் நாமம் )** என்பதில் வரும் 64 கோடி யோகினிகள் யார் எனக்கேட்கின்றனர்.

பாஸ்கரரும் அம்பிகையைத்தியானித்துப் பின்னர், வரிசையாக சொல்ல ஆரம்பித்து, அந்தந்த யோனிகளுக்கான பெயர், மந்திரங்கள் சாஸ்திரங்கள் **நவாஹணங்கள்** - சொல்ல வைதீகர்கள்
பிரம்மித்தனர் குங்கு மாந்தரியிடம் இந்த அற்புத செயலின் காரணம் என்ன? என வைத்தீகர்கள்வினவ, பாஸ்கரராயர் சாதாரணமானவர் அல்ல;

அன்னையவளே கிளி உருவாக அவர் தோளில் அமர்ந்து பதில் தருகிறாள் என்றுகூறி, அங்குபாஸ்கரர், முன்னே வைக்கப்பட்டிருந்த, கிண்ணத்தில் உள்ள ஜலத்தால், வைதீகர் ஒருவரின் கண்ணைத் துடைக்க, பாஸ்கரர் தோளில் கிளி உருவில் அன்னை அமர்ந்திருப்பதைக்கண்டு பரவசமடைந்து, அக்காட்சியை அனைத்து வைதீகர்களும், காணச்செய்து , அன்று முதல் பாஸ்கரரைத் தங்களது குருவாக ஏற்கின்றனர்.

## பாஸ்கரராயரின் மகாத்மியம்:

பாஸ்கரராயர், தனது வயது முதிர்ந்த காலத்தில், அப்போது
**மத்தியார்ரஜீனம்** என்றும், தற்போது **திருவிடைமருதூர்** என்றும் வழங்கப் பெறும் திருவிடைமருதூர், மஹாதானத் தெருவில், உள்ள ஒரு வீட்டில் வசித்து வந்த போது, மாலை வேளையில், தனது விட்டுத்திண்ணையில் கால்மீது, கால் தூக்கிப் போட்டு அமர்ந்து, சீடர்களுக்குப் போதிப்பது வழக்கம்.

அப்போது அவர் வீட்டை நித்தமும், **வேப்பத்தூரில்** இருந்து, கடந்து சென்று, மத்யார்ஜீனக் கோயிலை வலம் வரும் சந்நியாசி, அதனைத் தன்னை மதியாமல் பாஸ்கரராயர் செய்வதாய் எண்ணி, ஒரு நாள் மாலைத்திருக்கோயிலில், பிரதோஷ வேளையில், பாஸ்கராயரிடம் - இதனை மரியாதைக் குறைவான செயல் - எனக்கூற, பாஸ்கரரோ, ஐயா, நான் உமக்குத்தலை வணங்கினால், உமது உயிர் சேதமாகும்; இதனை நிருபிக்க வேண்டி, அந்த சந்நியாசியின் "**தமண்டக்குச்சியை**" சாத்திவைக்கச் சொல்லி அதற்குத்தலைவணங்க, அந்தத் தண்டம் இரண்டாக வெடித்துச் சிதறியது ஸ்ரீ வித்ய பூர்ணாபிஷேகம் , அம்பிகை உபாசகருமான ஒருவர் சந்நியாசிகளுக்கு தலை வணங்கல் ஆகாது என்ற உண்மை உணரப்பட்டது.

## **பாஸ்கரரின் உயர் பயணம்:**

“ பாஸ்கரர் தான் தர்க்க வாதம்கற்ற **ஸ்ரீ கங்ககாதாவாஜ் பாயி** என்பவர்க குடிபுகுந்த, தஞ்சை மாவட்டம் (நாகை மாவட்டம் ) **திருவலங்காட்டுக்கு** அருகே உள்ள பாஸ்கரராஜ புரத்துலேயே குடியேற, அங்கு ஸ்ரீசக்கரமேரு நிரு வினார். அவர்குடியேறி **பாஸ்கரராஜபுரம்**, எனும் கிராமம், தஞ்சை ஆண்ட மராட்டிய மன்னர் **ராஜா பான்ஸ்லே** என்பவரால் தானமாக வழங்கபட்டது.

அங்கே ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம நாமா வளியை சக்ரமாமேருவாக்கி, நவாவரணபூஜை செய்து, தனது இறுதிக்காலத்தை திருவிடைமருதூரில் கழித்தார். அந்த திருவிடைமருதூரில் அவர் வாழ்ந்த “**பாஸ்கர நிலயம்** “ - இன்னொருவர் கை மாறினாலும், இன்றளயவும், அந்த இல்லத்தில், அவருக்கு உரிய அறையில், விளக்கிட்டு சிறப்புபூஜை செய்கின்றனர். தென்னாட்டுக் காவிரிக்கரையில், அம்பிகையின் உபாசகராயத் திகழ்ந்தவர் - அபிராமிபட்டர்.

அதுபோல் வடநாட்டில் பிறந்தவர் - நம் தமிழ் நாட்டுக்கு வந்து, காவிரியின் தென் கரையில், தனது 93வது வயதில் 1776 - ல் அதிஷ்டானம் கண்டவர் நமது பாஸ்கரராயார். இன்னும் அவரது லலிதா சஹஸ்ரநாம ஸதோத்ததிரத்தையும், பாஷ்யத்தையும் வடமொழியிலேயே பாடுபவர் பலர்.

## **பாஸ்கரர் பற்றிய விவரங்கள்:**

பாஸ்கரர் வட மொழிப்பிரவாகையிலேயே இருந்து உபவாசகம் செய்ததால், தமிழில் அவர் பற்றிய செய்திகளும், விவரங்களும் கிடைப்பதாகத் தெரியவில்லை.

அனைத்தும் வட மொழியிலேயே வாரணாசியில் உள்ள சரஸ்வதி புத்தகாலயத்தில் கிடைக்கப் பெறுகின்றது. சென்னையில் உள்ள
ஞானபாஸ்கர சங்கம் - தமிழில் லலிதா சாரஸ்நாம விளக்கம் என்ற வெளியீட்டை வெளியிட்டுள்ளனர்.

அனைவரும் ஸ்ரீ **லலிதா சாரஸ்நாமம் பாராயணம்** செய்து,
பாஸ்கரராயரின் பூரண ஆசியையும், அம்பாளின் அருளையும் பெறுவோம்.

***************************